# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



87
105

# திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை : அ.சதீஷ்குமார்

ந.க.எண்.268/2020 மனைப்பிரிவு உரிம எண்.3/2021–22 நாள். 16.06.2021

ஆணை !

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு – செங்கல்பட்டு மாவட்டம் – திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி – காலவாக்கம் கிராமம் புல எண்.240/1C,11A–ல் 2.00 ஏக்கர் (8100.00 ச.மீ.) பரப்பளவில் அமையும் மனைப்பிரிவுக்கு–அங்கீகாரம் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. துணை இயக்குநர் (பொ) உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், 124, ஜி.எஸ்.டி. சாலை, நகராட்சி வணிக வளாகம், செங்கல்ட்டு கடித ந.க.எண்.2533/2020 மா.உ.தி.கு. (செ.ம.5) நாள்.21.09.2020.
2. இப்பேரூராட்சி தனி அலுவலரின் தீர்மானம் எண்.512 நாள்.29.01.2021.
3. இவ்வலுவலக கடித ந.க.எண்.268/2020 நாள்.21.01.2021.
4. தானப்பத்திரம் பதிவு எண்.3004/2021 நாள்.22.02.2021.
5. இவ்வலுவலக கடித ந.க.எண்.268/2020 நாள்.24.02.2021.
6. இவ்வலுவலக கடித ந.க.எண்.268/2020 நாள்.20.04.2021.
7. செயல் அலுவலர் மற்றும் பொறியியல் கூட்டாய்வு சான்று நாள்.20.04.2021
8. துணை இயக்குநர் (பொ) உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்ட குழுமம், செங்கல்பட்டு அவர்களின் கடித ந.க.எண்.2533/2020 மா.உ.தி.கு. (செ.மா.5) நாள்.30.04.2021.
9. பேரூராட்சி மன்ற தனி அலுவலரின் முன்அனுமதி நாள்.10.06.2021
10. இவ்வலுவலக கட்டணம் கேட்பு அறிவிப்பு ந.க.எண்.266/2020 நாள்.11.06.2021.
11. திரு.I.நவநீத்சேத்யா & சுபாஷ்சந்த்போத்ரா, எண்.9/10, வேப்பேரி சர்ச் ரோடு, சுவஸ்திக் அப்பார்ட்மெண்ட், 2வது தளம், சென்னை 7 என்பவரின் பொறுப்பு ஒப்பந்தம் நாள்.16.06.2021.
12. உரிய பிற ஆவணங்கள்.

--------

திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி, காலவாக்கம் கிராமம் புல எண்.240/1C, 11A–ல் 2.00 ஏக்கர் (8100.00 ச.மீ) பரப்பளவில் அமைந்துள்ள திரு.I.நவநீத்சேத்யா & சுபாஷ்சந்த்போத்ரா என பெயரிட்டுள்ள மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி அளிப்பது தொடர்பாக மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் கடித ந.க.எண்.2533/2020 மா.உ.தி.கு. (செ.ம.5) நாள்.21.09.2020 மற்றும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் கடித க.எண்.2533/2020 மா.உ.தி.கு. (செ.மா.5) நாள்.30.04.2021–ன்படியும், பார்வை 1–ல் காணும் கடிதத்தின் நிபந்தனைகளின்படி உத்தேச சாலை மற்றும் பூங்காவிற்கான இடத்தினை உள்ளாட்சிக்கு ஒப்படைக்க கடிதம் வரப்பெற்றுள்ளது. பார்வை 1 முதல் 12 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் சுட்டிகாட்டிய நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் கருத்தில் கொண்டு கீழ்கண்ட நிபந்தனைகளின்படி இம்மனைப் பிரிவிற்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

1. பார்வை 1–ல் கண்டுள்ள மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் கடித ந.க.எண்.2533/2020 மா.உ.தி.கு. (செ.ம.5) நாள்.21.09.2020 மற்றும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் கடித க.எண்.2533/2020 மா.உ.தி.கு. (செ.மா.5) நாள்.30.04.2021–ன் அனுமதி கடிதத்தில் உள்ளவாறும் அரசாணை (நிலை) எண்.71, ஊரக வளர்ச்சித்துறை நாள்.16.06.2003–ன்படியும் இம்மனைப்பிரிவு ஒப்புதல் உள்ளடக்கியதாகும். மேலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920ன் கீழ் பிரிவு 125, 175 மற்றும் 179–ல் தெரிவிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு ஒப்புதல் விதிகளுக்கு உட்பட வேண்டும்.

2. இந்த அனுமதி ஆணை தவறான தகவலின் பேரில் பெற்றுக்கொண்டு இருந்தாலும் அனுமதி ஆணையில் கண்டுள்ள நிபந்தனைகளை அவர்மீறி நடந்தாலும் இந்த அனுமதி ஆணை ஒப்புதல் அளித்ததை ரத்து செய்யப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

59

3 நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் வருவாய் துறையின் சட்ட திட்டங்களுக்கு உட்படவேண்டும். மேலும் தடையில்லா சான்று குறித்து விவரம் தேவைப்படும் நிகழ்வில் எழுத்து பூர்வமான தகவல்கள் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும். மேலும், மனைப்பிரிவு அமைப்பிற்கு அணுகு சாலை பேரூராட்சியின் வத்திநீர்குளம் அருகில் உள்ள Dr.A.P.J.அப்துல்கலாம் சாலையை பின்வரும் காலங்களில் ஏதேனும் ஆட்சேபணை எழும் நிகழ்வில் இம்மனைப்பிரிவிற்கான அணுகு சாலையை மாற்றியமைக்கும் பொறுப்பு தங்களையே சாரும். மேலும் மனைப்பிரிவின் அங்கீகாரம் ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொண்டு புதிய அணுகு சாலைக்கு திருத்திய மனைப்பிரிவு வரைபட அனுமதி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் செங்கல்பட்டு அவர்களிடமிருந்து திருத்திய ஒப்புதல் மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெற்றுத்தர நிபந்தனை விதிக்கப்படுகிறது.

மேலும் நில உரிமம் குறித்து பதிவுத்துறை மூலம் வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்ய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களுக்கு பரிந்துரைக்கப்படும். மேலும், இறுதி ஒப்புதல் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

4 திருப்போரூர் பேரூராட்சி காலவாக்கம் கிராமம் புல எண்.240/1C, 11A-ல் 2.00 ஏக்கர் (8100.00 ச.மீ) பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு அணுகு சாலை, பார்வை 1-ல் காணும் கடிதத்தின் தொழில்நுட்ப ஒப்புதல் திட்ட அனுமதியின் அடிப்படையில் மட்டுமே இந்த இறுதி ஒப்புதல் உட்படுகிறது. மேலும், உத்தேச சாலை மற்றும் பூங்காக்கள் (OSR) அதற்குரிய தானப்பத்திரங்களில் தவறுகள் ஏதேனும் கண்டறிந்தால் மனைப்பிரிவு ஒப்புதல் ரத்து செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

5 மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் செயல்முறை ந.க.எண்.2533/2020 (செ.மா.5) நாள்.30.04.2021-ல் உள்ள நிபந்தனைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளவாறு, நிபந்தனைகளை மீறுதல்கூடாது எந்தஒரு நிகழ்விலும் மீறியது கண்டறியப்பட்டால் முன்னறிவிப்பின்றி உத்திரவு இரத்து செய்யப்படும்.

6 மேற்படி நிபந்தனைகளும், நகர் ஊரமைப்பு ஆணைய நிபந்தனைகளையும் மீறி நடந்து கொள்வது கண்டறியப்பட்டாமல் மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்யப்படும் என்ற நிபந்தனை விதிக்கப்படுகிறது.

7 காலவாக்கம் புல எண்.240/1C, 11A-ல் 2.00 ஏக்கர் (8100.00 ச.மீ) பரப்பளவு மனைப்பிரிவு அங்கீகாரம் மீது 2021-2022ம் நிதி ஆண்டில் தணிக்கை தடை எழுப்பினால் அதற்கு தங்கள் கட்டுப்பட்டு தணிக்கை தடையை நிவர்த்தி செய்ய வேண்டும். தவறும்பட்சத்தில் இம்மனைபிரிவின் மனைகளுக்கு கட்டிட வரைபட அனுமதி வழங்க இயலாது.

8 இம்மனைப்பிரிவில் குடிநீர் வசதி செய்ய பொறுப்பு ஒப்பந்த கடிதப்படி 30 நாட்களுக்குள் செய்து முடித்து GPS camera-ல் A4 Size புகைப்படம் எடுத்து இவ்வலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும் தவறும்பட்சத்தில் Under Taking Letter-ல் தெரிரிரிவித்தப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

செயல் அலுவலர்
திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி
செங்கல்பட்டு மாவட்டம்

இணைப்பு : அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் கடிதம்.

பெறுநர் : திரு.I.நவநீத்சேத்யா & சுபாஷ்சந்த்போத்ரா,
எண்.9/10, வேப்பேரி சர்ச், சுவஸ்திக் அப்பாட்மெண்ட்,
2வது தளம், சென்னை 600 007.

நகல் :
1. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

## மனைப்பிரிவு நிபந்தனைகள்

அ. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ./மா.உ.தி.கு. (செ.மா) **எண்**.18/2021 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக்கற்கள் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் ஊராட்சி கட்டிட விதிகள் 3(5)-ன்படி ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கேற்ப சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரரால் நிர்வாக அதிகாரியால் (Executive Authority) நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும்.

ஆ. அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால் துப்புரவு வசதி, தெரு விளக்கு ஆகிய வசதிகள் நிர்வாக அதிகாரியின் கருத்திற்கேற்ப மனுதாரர் அமைத்துத் தரவேண்டும்.

இ. நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதல் இன்றி செய்தல் கூடாது.

ஈ. மேற்படி சாலைகளை பொதுச் சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு தொகையை தனி அலுவலருக்கு செலுத்துதல் வேண்டும். இதை நடைமுறைப்படுத்த மனுதாரரிடமிருந்து சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கான உட்பிரிவு கட்டணத் தொகையைப் பெறும் வகையில் பத்திரத்தில் மனுதாரரின் கையொப்பம் பெற வேண்டும்.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகள் நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். இதில் கடை, பண்டகச்சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள்யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

5. விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒரு பக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக் கூடாது.

6. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் மனைப்பிரிவில் காட்டியுள்ளவாறு கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7 மீ. (23 அடி) சாலை முதல் 12 மீட்டருக்கு (40 அடிக்கு) அகலம் வரையிலான சாலைகளுக்கு 1.5 மீட்டரும் (5 அடியும்); 12 மீட்டர் (40 அடி)

61

சாலைக்கு மேல் மற்றும் 30.5 மீட்டர் (100 அடி) அகலத்திற்குற்குட்பட்ட சாலைக்கு 4.5 மீட்டர் (15 அடியும்) அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6 மீட்டர் (20 அடி) என்ற அளவில் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். ஊராட்சி கட்டிட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிற்கும உட்பட்ட நிலப் பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.80 மீட்டர் (6 அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டிடமோ, சுவரோ கட்டுதல் கூடாது.

7. மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.50 மீ. அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3.0 மீ. திறவெளி விடப்படவேண்டும். 10 மீ. வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத்திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.50 மீட்டர் விடப்பட வேண்டும்.
8. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3 மீ. அளவுகள் திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்தப் பின்பக்கத் திறவெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்துவண்டி நிறுத்தம், கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லது ஆனால் அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம். ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு. மேற்படாமலும் மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3.0 மீட்டர் / 3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
9. விரிவு அபிவிருத்தித் திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50 அல்லது 67 விழுக்காட்டிற்கு மேல் கட்டிடம் கட்டப்படக்கூடாது. கட்டாமல் விடப்படும் திறந்தவெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்புரவாக பராமரித்தல் வேண்டும்.
10. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
11. கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ நிலச்சரிவை சரி செய்யவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்துதலோ கூடாது.
12. 9.0 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்தது 9.0 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.0 மீட்டருக்குள் அமைக்கப்படவேண்டும்.
13. மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய செயல் அலுவலர் அவர்களிடம் இருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.
14. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
15. கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம் / இடங்கள் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். இதனை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

62 109

16. பூங்கா, சிறுவர் விளையாடுமிடம், திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்க வேண்டும்.

17. மனையின் ஊடே குறைந்த அழுத்த/உயர் அழுத்த மின் கம்பிப் பாதை/.தந்திக் கம்பிப் பாதை அமைந்தால் கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றியமைக்க வேண்டும்.

18. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக தனி அலுவலருக்கு (Special Officer)யுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும்.

19. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில் நுட்ப ஒப்புதல் (Technical Approval) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

இ. மனைப்பிரிவு இடம் 1984-ம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4(1)-ன் படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா? என்பது பற்றி பரிசீலனை செய்த பின்னரும் நில உச்சவரம்புச் சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதற்காக ஊராட்சி மன்ற தலைவர்/ (Executive Authority) மனநிறைவு அடைந்த பின்னரேதான் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஈ. மேற்படி மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும்.

உ. மேலும் மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதம் பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதனையும் மனநிறைவு அடைந்த பின்னரேதான் மனைப்பிரிவுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்பட வேண்டும்.

20. மனுதாரர் மனைப்பிரிவு வரைபடத்திற்கு திருப்போரூர் பேரூராட்சி, செயல் அலுவலர், அவர்களிடம் வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில்அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மானம் எண்ணும், நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாகக் குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

63

21. தமிழ்நாடு வீட்டு வசதி மனைப்பிரிவு மனையின் பரப்பு 110 சதுர மீட்டருக்குக் குறைவாக இருந்தால் கட்டிட விதிகள் மட்டுமே பொருந்தும்.
22. நிலவங்கி என்று ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை அரசாணை எண்.139, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 14.09.1993-ன் படி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டும்.
23. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நிலஉரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.
24. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
25. இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்பந்தப்பட்ட இடத்தில் 6 அடி X 4 அடி என்ற அளவுக்குக் குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.
26. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் மனைப்பிரிவு வரைபடம் நகல் வழங்கப்பட வேண்டும்.

**அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விவரம்**

| விவரம் | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 87120 ச.அடி (அ) 2.0 ஏக்கர் | -- |
| கோரிய மனைகள் | - | 48 | -- |
| ஒதுக்கிய மனைகள் | - | 49 | -- |
| பொது ஒதுக்கீடு<br>மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது.<br>பொது உபயோகம் | - | 320.00 ச.அடி | 0.56% |
| உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | - | 2833.43 ச.மீ | -- |
| தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது | - | 320.00 ச.அடி | 0.56% |

துணை இயக்குநர்(பொ)/உறுப்பினர் செயலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

30/4/21

30/4/21

157

இயக்குநர் (பொ)/உறுப்பினர் செயலர் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
செங்கல்பட்டு அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு.கி.சந்திரசேகர்,B.E., M.T.P.,

ந.க.எண் 2533/2020 மாம திரு. (செ.மா -5) நாள் 20.04.2021

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலம், செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் - செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம்/பேரூராட்சி, காலவாக்கம் கிராமம், சர்வே எண்கள்: 240/1C,11A-ல் 2.0 ஏக்கர் (8100.0 ச.மீ) பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை:

1. மனுதாரர் Thiru.Navaneeth Sethiya & Thiru.Subash Bothra, Chennai, அவர்களின் கடிதம் நாள் 03.09.2020 (Online Application No: 202001601016767 Dt:25/08/2020)
2. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.14619/1988/பிசி, நாள்.27.04.1988.
3. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40483/ 2000/எல்ஏ1, நாள்.07.11.2002.
4. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், அவர்கள் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.16985/ 2000/எல்ஏ2, நாள்.29.09.2007.
5. அரசாணை (நிலை) எண்.71 ஊரக வளர்ச்சித் துறை நாள்:16.06.2003.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/2014/சிபி, நாள்.04.07.2014.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/எல்ஏ1, நாள்.08.09.2017.
8. அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 (ம) அரசாணை (நிலை) எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
9. அரசாணை (நிலை) எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 04.06.2004
10. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் : 21.09.2020 (சாலைகள் (ம) பொது உபயோகப் பகுதிகள் உள்ளாட்சிக்கு ஒப்படைக்க கோரியது)
11. சார்பதிவாளர், திருப்போரூர் அவர்கள் கடிதம் ந.க.எண்:282/2020 நாள்:08.10.2020.
12. செயல் அலுவலர், திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி, அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் ந.க.எண்:268/2020, நாள்:19.04.2021 (ம) மனுதாரர் கடிதம் நாள்: 03.03.2021 (சாலைகள் (ம) பொது உபயோகப் பகுதிகள் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட தானப்பத்திர நகல் எண்:3004/2021, பொருள் எண்:7, தீர்மானம் எண்:512 நாள்:27.01.2021-ன் நகல் பெறப்பட்டது)
13. இவ்வலுவலக கேட்பு கடிதம் இதே எண் நாள் 26.03.2021. (கட்டணங்கள் செலுத்தக் கோரியது)
14. மனுதாரர் Thiru.Navaneeth Sethiya & Thiru.Subash Bothra, அவர்களின் கடிதம் நாள்: 20.04.2021 (கட்டணங்கள் செலுத்தப்பட்டது)

TAMILNADU REAL ESTATE REGULATORY AUTHORITY
05 JUL 2021
TNRERA
CHENNAI-8

15. 172-வது மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும கூட்டத் தீர்மானம் எண்:2, நாள்:23.12.2020.

**********

மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் பகுதி, செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம்/பேரூராட்சி, காலவாக்கம் கிராமம், சர்வே எண்கள்: 240/1C,11A-ல் 2.0 ஏக்கர் (8100.0 ச.மீ) பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி வழங்க பார்வை 1-ல் கண்ட மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/மா.உ.தி.கு.(செ.மா) எண். 18/2021** என எண்ணிடப்பட்டு இரண்டு தொகுப்புகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

1. பார்வை 5-ல் சுட்டியுள்ள அரசாணையின்படி சாலைகள் மற்றும் பொது உபயோக பகுதி ஆகியவைகளை மனுதாரரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெற்றும், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளை செய்து மனைப்பிரிவு முழுமையாக அபிவிருத்தி செய்து அதனை உள்ளாட்சிக்கு ஒப்படைத்த பின்னர், மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும், இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை 19(இ),19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது
2. மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன்படி இவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது
3. **The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms No.71, RDLA dated 16.06.2003 and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.**
4. பார்வை 12-ல் கண்ட கடிதம் மூலம் பெறப்பட்ட இணைப்புகளில் உள்ளவாறு உள்ளாட்சியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலை மற்றும் பொது உபயோக இடத்தினை தனி புல உட்பிரிவு பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
5. உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் உள்ளாட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது" என்பதை சம்பந்தப்பட்ட தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்த தகுதி சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
6. மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை நடைமுறை செயல்பாட்டில் உள்ள சாலைகளாக நிலை நிறுத்தப்பட வேண்டும்.

159

7. மனைப்பிரிவில் அமையும் வடிகால் மற்றும் தெரு விளக்கிற்கு மனுதாரரால் உரிய கட்டணம் வசூல் செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

8. பார்வை (15)-ல் கண்ட 172-வது மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும கூட்டத் தீர்மானம் எண்:2, நாள்:23.12.2020-ல் பெறப்பட்ட அதிகார பகிர்வின்படி மேற்படி மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

<u>கட்டண விவரங்கள்:-</u>

பார்வை 8 மற்றும் 9 -ல் காணும் அரசாணைகளின்படி மனைகளுக்கான கூராய்வு கட்டணம், துணைக்கோள் நகர வளர்ச்சிக் கட்டணம், OSR கட்டணம், நன்னிலை வரி, வளர்ச்சிக் கட்டணம் (ம) Display Board கட்டணம் கோரப்பட்டு பார்வை 14-ல் கண்ட மனுதாரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய அனைத்து கட்டணங்களும் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது அதற்கான விவரம் பின்வருமாறு :

1. நன்னிலை வரி கட்டணம் ரூ.15,000/-க்கான SBI, Chengalpattu கிளை, நாள். 20.04.2021 -ல் செலுத்தியதற்கான கருவூலக செலுத்து சீட்டு பெறப்பட்டுள்ளது.
2. Display Board கட்டணம் ரூ.10,000/-க்கான IOB மாமல்லபுரம் வங்கி கிளை இவ்வலுவலக கணக்கு எண். 40000-த்தில் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், தலைப்பில் நாள்.20.04.2021-ல் செலுத்தப்பட்டு அதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.
3. அபிவிருத்தி கட்டணம் ரூ.33,000/-க்கான IOB மாமல்லபுரம் வங்கி கிளை இவ்வலுவலக கணக்கு எண். 40000-த்தில் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், தலைப்பில் நாள்.20.04.2021 -ல் செலுத்தப்பட்டு அதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.
4. கூராய்வு கட்டணம் ரூ.12,300/-க்கான IOB மாமல்லபுரம் வங்கி கிளை இவ்வலுவலக கணக்கு எண். 40000-த்தில் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் பெயரில் நாள்:02.09.2020-ல் செலுத்தப்பட்டுள்ளது.
5. துணைக்கோள் நகர வளர்ச்சிக் கட்டணம் ரூ.2,03,000/- The Director, DTCP Chennai, என்ற பெயரில் Bank of Baroda, Chennai வரைவோலை எண்: 946704, நாள்: 17.04.2021 -ல் பெறப்பட்டுள்ளது.
6. OSR கட்டணம் ரூ.7,04,000/-க்கான SBI, Chengalpattu கிளை, நாள். 20.04.2021-ல் செலுத்தியதற்கான கருவூலக செலுத்து சீட்டு பெறப்பட்டுள்ளது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1) பார்வை 6-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் உள்ள சிறப்பு நிபந்தனையின்படி "நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது

அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

2) பார்வை 7-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி "The Tamil Nadu Government, in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated : 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Ragulation & Development) Act 2016. The promoter has to advertises, Market book sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority - ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

துணை இயக்குநர்(பொ)/உறுப்பினர் செயலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

30/4/21.

30/4/21

<u>இணைப்பு:</u>
மனைப்பிரிவு வரைபடம் (ம)
மனைப்பிரிவு நிபந்தனைகள் (2 நகல்கள்)

<u>பெறுநர்:</u>
செயல் அலுவலர்,
திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்.

<u>நகல்:</u>
1. Thiru Navaneeth Sethiya &
Thiru Subash Bothra,
No.9/10, Vepery Church,
Swasthick Apartment, 2nd Floor,
Chennai - 600 007.
Mobile: 9791649972.

2. நகர் ஊரமைப்பு இயக்குநர்,
சென்னை அவர்களுக்கு
மனைப்பிரிவு வரைபடம் (ம)
மனைப்பிரிவு நிபந்தனைகளுடன்
அனுப்பி வைக்கப்படுகிறது.

3. துணை இயக்குநர்(பொ)/உறுப்பினர் செயலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு
அலுவலகத்து மனைப்பிரிவு வரைபட மற்றும் நிபந்தனைகளுடன்

<u>மனைப்பிரிவு நிபந்தனைகள்</u>

அ. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு மஉவ/மாஉதிகு. (செமா) எண்.18/2021 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக்கற்கள் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் ஊராட்சி கட்டிட விதிகள் 3(5)-ன்படி ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கேற்ப சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரரால் நிர்வாக அதிகாரியால் (Executive Authority) நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும்.

ஆ. அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால் தூய்மரவு வசதி, தெரு விளக்கு ஆகிய வசதிகள் நிர்வாக அதிகாரியின் கருத்திற்கேற்ப மனுதாரர் அமைத்துத் தரவேண்டும்.

இ. நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதல் இன்றி செய்தல் கூடாது

ஈ. மேற்படி சாலைகளை பொதுச் சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு தொகையை தனி அலுவலருக்கு செலுத்துதல் வேண்டும். இதை நடைமுறைப்படுத்த மனுதாரரிடமிருந்து சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கான உட்பிரிவு கட்டணத் தொகையைப் பெறும் வகையில் பத்திரத்தில் மனுதாரரின் கையொப்பம் பெற வேண்டும்.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகள் நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை பண்டகச்சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும் அந்த இடங்களை உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக கொள்ள வேண்டும்

5. விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒரு பக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளோ கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக் கூடாது.

6. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் மனைப்பிரிவில் காட்டியுள்ளவாறு கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். அகலம் அமையும் 7 மீ. (23 அடி) சாலை முதல் 12 மீட்டருக்கு (40 அடிக்கு) 12 மீட்டர் (40 அடி) வரையிலான சாலைகளுக்கு 1.5 மீட்டரும் (5 அடியும்),

சாலைக்கு மேல் மற்றும் 30.5 மீட்டர் (100 அடி) அகலத்திற்குற்குட்பட்ட சாலைக்கு 4.5 மீட்டர் (15 அடியும்) அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6 மீட்டர் (20 அடி) என்ற அளவில் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். ஊராட்சி கட்டிட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிறகும் உட்பட்ட நிலப் பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.80 மீட்டர் (6 அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டிடமோ, சுவரோ கட்டுதல் கூடாது. 165

7. மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.50 மீ. அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3.0 மீ. திறவெளி விடப்படவேண்டும். 10 மீ. வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத்திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.50 மீட்டர் விடப்பட வேண்டும்.

8. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3 மீ. அளவுகள் திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்தப் பின்பக்கத் திறவெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்துவண்டி நிறுத்தம், கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லது ஆனால் அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம். ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3.0 மீட்டர் / 3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

9. விரிவு அபிவிருத்தித் திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50 அல்லது 67 விழுக்காட்டிற்கு மேல் கட்டிடம் கட்டப்படக்கூடாது. கட்டாமல் விடப்படும் திறந்தவெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்புரவாக பராமரித்தல் வேண்டும்.

10. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்

11. கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ நிலச்சரிவை சரி செய்யவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்துதலோ கூடாது

12. 9.0 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்தது 9.0 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் மரங்கள் எதிர்த்தாற்போல் அமைக்கப்பட வேண்டும்.
சாலையின் எல்லையிலிருந்து 1.0 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

13. மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய செயல் அலுவலர் அவர்களிடம் இருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும்
உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

14. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும் மனைகளை அதற்குரிய உபயோகத்திற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்

15. கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம் இடங்கள் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும் இதனை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்

167

16. பூங்கா, சிறுவர் விளையாடுமிடம், திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்க வேண்டும்.

17. மனையின் ஊடே குறைந்த அழுத்த/உயர் அழுத்த மின் சும்பிப் பாதை தந்திக் சும்பிப் பாதை அமைந்தால் சும்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றியமைக்க வேண்டும்.

18. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக தனி அலுவலருக்கு (Special Officer)யுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும்.

19. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில் நுட்ப ஒப்புதல் (Technical Approval) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

இ. மனைப்பிரிவு இடம் 1984-ம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4(1)-ன் படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா? என்பது பற்றி பரிசீலனை செய்த பின்னரும் நில உச்சவரம்புச் சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதற்காக ஊராட்சி மன்ற தலைவர்/ (Executive Authority) மனநிறைவு அடைந்த பின்னரேதான் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஈ. மேற்படி மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும்.

உ. மேலும் மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதம் பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதனையும் மனநிறைவு அடைந்த பின்னரேதான் மனைப்பிரிவுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்பட வேண்டும்.

20. மனுதாரர் மனைப்பிரிவு வரைபடத்திற்கு திருப்போரூர் பேரூராட்சி, செயல் அலுவலர், அவர்களிடம் வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மானம் எண்ணும், நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாகக் குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

21. தமிழ்நாடு வீட்டு வசதி மனைப்பிரிவு மனையின் பரப்பு 110 சதுர மீட்டருக்குக் குறைவாக இருந்தால் கட்டிட விதிகள் மட்டுமே பொருந்தும்.

22. நிலவங்கி என்று ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை அரசாணை எண்.139, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 14.09.1993-ன் படி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டும்.

23. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நிலஉரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

24. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

25. இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்பந்தப்பட்ட இடத்தில் 6 அடி X 4 அடி என்ற அளவுக்குக் குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

26. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் மனைப்பிரிவு வரைபடம் நகல் வழங்கப்பட வேண்டும்.

<u>அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விவரம்</u>

| விவரம் | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 87120 ச.அடி (அ) 2.0 ஏக்கர் | -- |
| கோரிய மனைகள் | - | 48 | -- |
| ஒதுக்கிய மனைகள் | - | 49 | -- |
| <u>பொது ஒதுக்கீடு</u><br><u>மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது.</u><br>பொது உபயோகம் | - | 320.00 ச.அடி | 0.56% |
| உத்தேச சாலைகள் மற்றும் மூலை மடக்குகள் | - | 2833.43 ச.மீ | -- |
| தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது | - | 320.00 ச.அடி | 0.56% |

துணை இயக்குநர்(பொ)/உறுப்பினர் செயலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

30/4/21



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate